முதல்வர் அலுவலகம் அரசினர் பொறியியற் கல்லூரி - கோவை 13

குறிப்பாணை எண். 5784 /ஈ2/ 2020 நாள் : 29.12.2020

பொருள் : கல்விக்கட்டணம் - அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை-13 பகுதிநேர பி.இ பயிலும் மாணவர்கள் 2020-2021ஆம் கல்வியாண்டிற்கான பருவ கல்விக் கட்டணம் செலுத்துதல்-குறித்து.

------------

இக்கல்லூரியில் பகுதிநேர பி.இ. பயிலும் மாணவ / மாணவிகள், 2020-2021-ஆம் கல்வியாண்டின் IV, VI ஆம் பருவ கல்விக் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாட்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கீழ்காணும் நாட்களுக்குள் கல்விக் கட்டணத்தைத் தவறாது செலுத்துமாறு மாணவ/மாணவியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கல்விக் கட்டணம் ஆன்லைனில் SBI வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே "Online SBI Payment Mode" மூலம் செலுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.

## பி.இ. (பகுதிநேரம்)

| வகுப்பு | கல்விக் கட்டணம் செலுத்த துவங்கும் நாள் | அபராதமின்றி செலுத்தக் கடைசி நாள் | ரூ.200/- அபராதத் தொகையுடன் செலுத்தக் கடைசி நாள் | கல்விக் கட்டணம் செலுத்தும் முறை (Mode of Payment) |
|---|---|---|---|---|
| **PART TIME BE**<br>II YEAR IV SEMESTER<br>III YEAR VI SEMESTER | 04.01.2021 | 18.01.2021 | 02.02.2021 | SBI Online Payment (Through SBI Bank Only) |

அபராதமின்றி கல்விக் கட்டணம் செலுத்த நிர்ணயம் செய்யப்பட்ட கடைசி நாளான 18.01.2021-க்குள் கல்விக் கட்டணம் செலுத்தாத மாணவ / மாணவியர்கள் கல்விக் கட்டணத்துடன் அபாரதத் தொகையாக ரூ.200/- சேர்த்துச் செலுத்தவேண்டும்.

அபராதத் தொகையுடன் கல்விக் கட்டணம் செலுத்த நிர்ணயம் செய்யப்பட்ட கடைசி நாளான 02.02.2021-க்குள் கல்விக் கட்டணம் செலுத்தாத மாணவ / மாணவியர்களின் பெயர் வருகைப் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும் என்பதையும் தெரிவிக்கலாகிறது. நீக்கம் செய்யப்பட்ட மாணவ / மாணவிகள் வகுப்பிற்கு வருகை புரிந்தாலும், மீள்சேர்க்கை (RE-ADMISSION) பெற்று கல்விக் கட்டணம் செலுத்திய நாளிலிருந்து தான் வருகைப் பதிவு வழங்கப்படும்.

த.தி.பா

மேலும், பெயர் நீக்கம் செய்யப்பட்ட மாணவ / மாணவிகள் மீள்சேர்க்கை (READMISSION) பெற விரும்பினால், முதல்வருக்கு விண்ணப்பித்து, முதல்வரின் அனுமதி பெற்ற பின்னரே, செலுத்த வேண்டிய கல்விக் கட்டணத்துடன் அபராதத் தொகையாக ரூ.200/-ம், மீள்சேர்க்கைக் கட்டணமாக ரூ.500/-ம் ஆக மொத்தம் ரூ.700/-ஐ சேர்த்து செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

துறைத் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் கல்விக் கட்டணம் செலுத்தாத மாணவ / மாணவிகளின் பெயர்களை வருகைப் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யுமாறும், பின்னர் மீள்சேர்க்கை பெற்று கல்விக் கட்டணம் செலுத்திய நாளிலிருந்து அலுவலக கல்வி கட்டண இரசீதினை சரிபார்த்த பின்னரே, வருகைப் பதிவு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- பெ.தாமரை
முதல்வர்

பெறுநர்

அனைத்து துறைத் தலைவர்கள்

நகல் : 1. முதல்வரின் மேசைக்கு
2.துணை முதல்வர்
3. முதல்வரின் நேர்முக உதவியாளர் / பொருளாளர்
4. அனைத்துக் கண்காணிப்பாளர்கள்
5. அறிவிப்புப் பலகை - கல்லூரி
6. தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்
7. சுயநிதி பாடப்பிரிவு
8. பாரத ஸ்டேட் வங்கி
9. தொகுப்பு கோப்பு

// ஆணையின்படி அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்
29/12/2020

pu/fees collection circular 2020-2021 pt be